**පාර්ලිමේන්තු සැසි අංක : 492**

**ආයතනයේ නම : දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය, මඩකලපුව**

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119(4) යටතේ **ගරු අමාත්‍යවරයාගේ** නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම.

**பாராளுமன்ற அமர்வு இலக்கம் : 492**

**நிறுவனத்தின் பெயர் : மாவட்டச் செயலகம், மட்டக்களப்பு.**

பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற்கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் **கௌரவ அமைச்சரின்** அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

**Parliamentary Publication Series No: 492**

**Name of the Institution: District Secretariat, Batticaloa.**

Submission of observations of **Hon. Minister** and steps taken with regard to the reports tabled by the Committee on Public Accounts in terms of Standing Order No. 119(4)

**பாராளுமன்றத்தில் பொது கணக்குக் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற்கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.**

**பாராளுமன்ற அமர்வு இலக்கம் : 492**

**மாவட்டச் செயலகத்தின் பெயர் : மட்டக்களப்பு.**

| பொது கணக்குக் குழுவினால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளும் வழிகாட்டலும் | கணக்கீட்டு உத்தியோகத்தரினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய முன்னேற்றம் |
|---|---|
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் ஒரு மாத காலத்திற்குள் பதில்கள் அனுப்பப்படவில்லை. உள்ளக கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் ஒரு மாத காலத்திற்குள் பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்காமைக்கான சந்தர்ப்பங்கள் காணப்பட்டிருந்தன. | ஒரு மாத காலத்தினுள் அனைத்து ஐயவினாக்களுக்கு பதிலளிப்பதற்கும், பதிலளிக்கப்படாத ஐயவினாக்களை குறைப்பதற்குமான நடைமுறைகளை பின்பற்றுகின்றோம். |
| அடையாளம் காணப்பட்டுள்ள நிலையான அபிவிருத்தி நோக்குகளை செயற்படுத்துவதன் மேம்பாட்டினை மதிப்பிடுவதற்கான குறிகாட்டிகள் அமைக்கப்படவில்லை. | நிலையான அபிவிருத்தி நோக்குகளை செயற்படுத்துவதன் மேம்பாட்டினை மதிப்பிடுவதற்கான குறிகாட்டிகள் அடையாளம் காணப்பட்டு செயல்படுத்தப்படுகின்றது. |
| நிறுவனத்தின் பிரஜைகள்/சேவைபெறுநர் சமவாயம் அமுலாக்கப்படுதல் பற்றி மேற்பார்வை செய்வதற்கும் மதிப்பீடு செய்வதற்குமான முறையியலொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது மாவட்ட செயலக நிருவாக நடவடிக்கைகள் 10.06.2024 ஆம் திகதி தொடக்கம் திராய்மடுவில் அமையப்பெற்ற புதிய மாவட்ட செயலக கட்டடத்திற்கு மாற்றம்செய்யப்பட்டு மக்களுக்கான சேவையினை மேற்கொண்டு வருகின்றது. பிரஜைகள் சேவைகள் பட்டயம் கணணிமயப்படுத்தப்பட்டு முன்னரங்க சேவைப்பிரிவில் காட்சிப்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. |
| தயாரிக்கப்பட்டிருந்த மனிதவளத் திட்டம் மூலமாக ஓர் ஊழியருக்காக குறைந்தபட்சம் 12 மணித்தியால மேலதிகப் பயிற்சி விதிக்கப்பட்டிருக்கவில்லை. | சகல உத்தியோகத்தர்களுக்கும் வருடத்தில் ஆகக் குறைந்தது 12 மணித்தியாலங்கள் பயிற்சி வழங்கப்படுவது தொடர்பாக மனித வள திட்டத்தில் குறிப்பிடப்படாமலிருந்த போதும் தற்போது சகல உத்தியோகத்தர்களிடமிருந்தும் பயிற்சிக்கான தேவைகள் கேட்டறியப்பட்டு அதற்கமைய மனிதவள அபிவிருத்தி திட்டமும் மாற்றியமைக்கப்பட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. |
| நிறுவனத்தின் கணக்குகள் பற்றிய கணக்காய்வு அபிப்பிராயம் தகுதியான/ ஒப்புதலளிக்க மறுக்கின்ற/ பாதகமான மட்டத்தில் நிலவியது. | எதிர்காலத்தில் தகுதிவாய்ந்த அபிப்பிராயத்தினை தெளிவான அபிப்பிராயமாக அடைவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. |
| இனங்கண்ட செயற்சுட்டியின் அடைவு 24%ஐ விட குறைந்த மட்டத்தில் நிலவியது. | தற்போது இனங்காணப்பட்ட செயற்சுட்டிகளை உச்சமட்டத்தில் அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது |
| மாவட்ட காணிப் பயன்பாட்டுக் குழுக் கூட்டங்கள் ஒவ்வொரு காலாண்டிற்கு ஒரு முறையாவது நடத்தப்படவில்லை. | மாவட்ட காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்களை முறையாக நடாத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. |
| 2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவ சட்டத்தின் பிரகாரம், அனர்த்த முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நடத்தப்படவில்லை. | 2024 ஆம் ஆண்டிலிருந்து மாவட்ட மட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டமானது முறையாக நடைபெற்றுவருகின்றது. |
| திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புக்கள் மூலமாக வழங்கப்பட்டிருந்த பயிற்சி வாய்ப்புக்களின் அளவு 50%ஐ பார்க்கிலும் தாழ்ந்த மட்டத்திலேயே நிலவியது. | தற்போது சகல உத்தியோகத்தர்களிடமிருந்தும் பயிற்சிக்கான தேவைகள் கேட்டறியப்பட்டு அதற்கமைய மனிதவள அபிவிருத்தி திட்டமும் மாற்றியமைக்கப்பட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. |
| மாவட்ட சுற்றுச்சூழல் குழு இரண்டு மாதங்களுக்கு ஒரு முறையாவது கூட்டப்படவில்லை. | மாவட்ட சுற்றுச்சூழல் குழு இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை கூட்டப்பட்டு செயல்படுத்தப்பட்டுவருகின்றது. |

மாவட்டச் செயலாளர்,
மாவட்டச் செயலகம்,
மட்டக்களப்பு.

J.S. ARULRAJ
Government Agent & District Secretary
Batticaloa.

பிரதம கணக்காளர்,
மாவட்டச் செயலகம்,
மட்டக்களப்பு.

Mrs. R. GAYATHIRY
Chief Accountant
For District Secretary
District Secretariat
Batticaloa.

## செயலாளரின் பரிந்துரை

மாவட்ட செயலாளரினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதுடன் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகளுக்கு தனிப்பட்ட கவனம் செலுத்தி அவற்றை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு மாவட்ட செயலாளரிக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது.

திரு. எஸ். ஆலோகபண்டார
செயலாளர்
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

S. Alokabandara
Secretary
Ministry of Public Administration,
Provincial Councils and Local Government

## அமைச்சரின் பரிந்துரைகள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

அரசாங்க கணக்குக்குழு மூலம் மாவட்ட செயலாளரிற்கு வழங்கப்பட்டிருக்கும் ஆலோசனைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தி, அக்குறைபாடுகள் மீண்டும் ஏற்படாமல் இருக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க அமைச்சின் செயலாளரிற்கு நான் அறிவுறுத்தியுள்ளதுடன், அச்செயற்பாடுகள் மூலம் 2026 ஆம் ஆண்டிற்குள் அதன் அடைவு மட்டத்திலிருந்து உயர் மட்டத்தை எட்ட முடியும் என்று எதிர்பார்க்கின்றேன்.

மாண்புமிகு (பேராசிரியர்) ஏ. எச். எம். எச். அபயரத்ன அவர்கள் (பா.உ)
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

Prof. A.H.M.H. Abayarathna
Minister of Public Administration, Provincial
Councils and Local Government
Independence Square, Colombo 07.